# திருவாய்மொழிப்பிள்ளை

## தனியன்

ஸ்ரீஸைலேஸகுரும் லோக தேஸிகாங்க்ரி ஸமாஸ்ரிதம் /
வ்ருஷே விஸாக ஸம்பூதம் வந்தே வரகுணாகரம் //

நமஸ்ஸ்ரீஸைல நாதாய குந்தீநகர ஜந்மநே /
ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே //



திருவாய்மொழிப்பிள்ளை – உற்சவர் - அவதாரஸ்தலம் - கொந்தகை
புகைப்பட உதவி – கொந்தகை ஸ்ரீ மாதவன் ஸ்வாமி, மதுரை

அவதாரஸ்தலம் - மதுரை சமீபம் குந்திபுரம் (கொந்தகை என்று தற்பொழுது அழைக்கப்படுகிறது).

திருநாமங்கள் - திருமலை ஆழ்வார், திருவாய்மொழிப்பிள்ளை, ஸ்ரீஸைலேஸர்

இவர் செய்தருளின வ்யாக்யானம் - பெரியாழ்வார் திருமொழிக்கு ஸ்வாபதேச வ்யாக்யானம்

**கோயில் கைங்கர்யம்** - ஆழ்வார் திருநகரி கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்தார். முகம்மதியப் படையெடுப்பின் போது கொச்சிக்கு அருகில் திருக்கணம்பி எனும் ஊரில் எழுந்தருளப்பட்டு இருந்த நம்மாழ்வாரை மறுபடியும் ஆழ்வார் திருநகரியில் எழுந்தருளச் செய்தார். ஏற்கனவே நம்மாழ்வார் நாதமுனிக்கு சாதித்தருளிய பவிஷ்யதாசார்ய விக்ரகத்தை, புதிய கோயில் ஒன்று அமைத்து அதில் எழுந்தருளச்செய்தார். அக்கோயிலை மையமாகக் கொண்டு `இராமானுஜ சதுர்வேத மங்களம்' என்கிற புதிய வீதிகளையும் குடியிருப்புக்களையும் அமைத்தார்.

சிஷ்யர்கள் - பெரியஜீயர், நம்மாழ்வார் கோயில் எம்பெருமானார் ஜீயர், எம்பெருமானார் கோயில் சடகோப ஜீயர், தத்வேஸ ஜீயர்

திருவாய்மொழியினிடத்தில் இருந்த அளப்பரிய ஈடுபாடு காரணமாக, இவர் திருவாய்மொழிப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

## தர்சனத் தலைமைக்கு பிள்ளை லோகாச்சார்யரால் நியமனம்

பிள்ளை லோகசாரியர் உடல் நலம் குன்றி கொடிக்குளம் என்னும் ஊரில் இருந்த போது அச்சமயம் மதுரையில் அமைச்சராக இருந்த திருவாய்மொழிபிள்ளையை திருத்தி பணிகொண்டு அவரை எம்பெருமானார் தரிசனத்திற்கு தலைமை ஏற்கச்செய்ய வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி, தமது சிஷ்யர்களான கூரகுலோத்தமதாசர், விளஞ்சோளைப்பிள்ளை, நாலூராச்சான்பிள்ளை, திருக்கண்ணங்குடி பிள்ளை ஆகியோரை நியமித்தார்.

## கூரகுலோத்தமதாசரும் திருவாய்மொழிப்பிள்ளையும்

உரியகாலம் வந்தபோது கூரகுலோத்தமதாசர் மதுரை சென்று யானை மீது பவனி வந்து கொண்டிருந்த திருமலையாழ்வாரை (திருவாய்மொழிப்பிள்ளையை) தகுந்த யுக்தியால் தன்பக்கம் ஈர்த்து அவர் திருமாளிகை சென்று ஸத்விஷயங்களை யெல்லாம் கற்பித்து அவர் மனத்தை கனியவைத்தார். (ஆளவந்தாருக்கு மணக்கால்நம்பி ஸத்ஸம்ப்ரதாயங்களை எல்லாம் சிறுது சிறுதாக எடுத்துக் கூறியது போல் இவரும் திருவாய்மொழிப்பிள்ளையை திருத்திப்பணிகொண்டார்). பின்னர் திருமலையாழ்வார் ராஜ்ய கார்யங்களுக்கு தகுந்த ஏற்பாடு செய்து விட்டு முழுமனதுடன் இவரிடம் ஆசார்ய ஹிருதயம் மற்றும் தத்வத்திரயம் முதலிய ரகஸ்ய வியாக்யானங்களை கேட்டறிந்தார்.

கூரகுலோத்தமதாசர் தம்முடைய சரம காலத்தில் திருமலையாழ்வாரை யழைத்தருளி விளஞ்சோலைப் பிள்ளையிடத்தில் ஸ்ரீவசநபூஷணத்தின் அர்த்த விசேஷங்களை யெல்லாம் கேளும் என்றும், திருக்கண்ணங்குடிப்பிள்ளையிடத்திலே திருவாய்மொழியை கேளும் என்றும், திருப்புட்குழி ஜீயரிடம் திருவாய்மொழியின் விசேஷார்த்தங்களையும், நாலூர்பிள்ளையிடம் மூவாயிரம் வ்யாக்யானங்களையும் கேட்டறியவும் என்று சொல்லி பிள்ளைலோகாசாரியர் திருவடிகளை தியாநித்துக்கொண்டு திருநாட்டுக்கு கெழுந்தருளினார். பிள்ளைலோகாச்சாரியரின் திருவுள்ளத்திற்கு உகப்ப திருவாய்மொழிபிள்ளை திருவனந்தபுரம் சென்று விளஞ்சோளைப்பிள்ளையிடம் ஸ்ரீவசநபூஷணத்தின் அர்த்த விசேஷங்களை கேட்டார். விளாஞ்சோலைப்பிள்ளை திருநாடு அலங்கரித்தபோது திருவாய்மொழிப் பிள்ளை சரம கைங்கர்யங்கள் செய்தார். பிறகு திருமலையாழ்வார் திருக்கண்ணங்குடிப்பிள்ளையிடம் சென்று திருவாய்மொழியை கற்றறிந்தார்.

## திருவாய்மொழியின் விசேஷார்த்தங்களை கேட்டல்

திருப்புட்குழி ஜீயரிடம் திருவாய்மொழியின் விசேஷார்த்தங்களை கேட்க திருவாய்மொழிபிள்ளை காஞ்சீபுரம் சென்றார். அப்பொழுது அந்த ஜீயர் திருநாடலங்கரித்து சிலநாட்கள் ஆகியிருந்தது. இவர் தேவப்பெருமாளை சென்று சேவித்தார். அங்கு நாலூர் பிள்ளையும் அவர் குமாரர் நாலூராச்சானும் வந்து இருந்தனர். தேவப்பெருமாள் அர்ச்சக முகேன `நீர் திருமலையாழ்வாருக்கு திருவாய்மொழி வ்யாக்யானமும், திருப்புட்குழி ஜீயர் பரமபதித்து விட்டதால் ஈடு முப்பதாறாயிரப்படியும் சேர்த்து ஸாதிக்கவும்' என்று சொன்னார். அதற்கு நாலூர் பிள்ளை தனக்கு வயதாகிவிட்டது என்று தெரிவிக்க, தேவப்பெருமாள் நாலூராச்சான் பிள்ளையிடம் அந்த பொருப்பைக் கொடுத்தார். அவரிடம் ஈடு வியாக்யானம்

கேட்டறிந்த பிறகு, இவர் மாமுனிக்கு அதனை சாதித்தார். மாமுனிகள் மூலம் ஈட்டை நாடும் நகரமும் நன்கறிய பரவச்செய்தார்.

<u>மணவாளமாமுனியை தர்சன தலைவராக நியமித்தல்</u>

திருவாய்மொழி பிள்ளை திருமேனியில் நோவுசாத்தி தளர்ந்துபோன சமயத்தில் அவர் மிகவும் க்லேசத்துடன் அங்கு குழுமியிருந்த தம் சிஷ்யர்களிடம் எம்பெருமானார் தர்ஸனத்தை வளர்த்துக் காக்க போகிறவர் யார் என்று கேட்க மாமுனிகள் `அடியேன் அப்படியே செய்கிறேன்' என்று சொன்னார். அப்பொழுது திருவாய்மொழிப்பிள்ளை மாமுனிக்கு கீழ்க்கண்ட உபதேசத்தை வழங்கினார். `சம்ஸ்க்ருத சாஸ்திரங்களிலே பலகாலும் கண்வையாமல், ஸ்ரீபாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் எம்பெருமானாருக்கும் ப்ரியமான திருவாய்மொழி முதலான அருளிச் செயலிலே அநவரதம் சிந்தை செய்துகொண்டு பூர்வர்களைப் போலே பெருமாளுக்கு மங்களாசாஸநபரராய் இருந்துகொண்டு ஸ்ரீரங்கத்திலே நித்யவாஸமாய் எழுந்தருளியிரும்' என்று ஆசீர்வதித்தார். சிஷ்யர்களை அழைத்து மாமுனிகள் அவதார புருஷர். ஆதலால் அவரை ஆதரித்து வாருங்கள் என்று தெரிவித்தார்.

<u>திருவாய்மொழி பிள்ளையின் தன்னேற்றம்</u>

1) ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய பரம்பரையில் திருவாய்மொழி பிள்ளை ஆளவந்தரைப் போல, அரசுப்பொருப்பைத் துறந்து தர்சனப் பொறுப்பை ஏற்றார்.

2) இராமானுஜரைப் போலவே, இவரும் ஐந்து ஆசார்களிடத்தில் அர்த்த விசேஷங்களை கேட்டரிந்தார்.

3) பெரிய நம்பிகள் மாறனேரி நம்பிக்குச் சரம கைங்கர்யங்கள் செய்தது போல, இவரும் விளாஞ்சோலை பிள்ளைக்குச் சரம கைங்கர்யங்கள் செய்தார்.

4) ஆளவந்தார் எம்பெருமானாரை தனக்கு பிறகு நம் தர்சனத்தின் தலைமை பொறுப்பை ஏற்கச் சொன்னது போல, இவரும் மாமுநிகளின் சிறப்பைக்கருதி தனக்கு பிறகு இந்த தர்சனத்தின் தலைமை பொறுப்பை ஏற்கச் சொன்னார்.

5) பரமாசாரியரான நம்மாழ்வாரையும் அவர் அடிபணிந்து உய்ந்தவரான உடையவரையும் திருநகரியிலே பிரதிஷ்டைசெய்து அனைத்து உற்சவங்களையும் ஏற்படுத்தினார்.

6) ஆழ்வார்களின் அருளிச் செயல்களை ருசி விச்வாஸங்களோடு வளர்த்துக் கொண்டு போந்தது.

7) மாமுனிகளுக்கு ஈடு சாதித்தது.

நம்மாழ்வரை போற்றி இவர் அருளிள்ள ஸ்லோகம்

சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம்
அஜ்ஞாநாம் ஜ்ஞான ஜநகம் திந்த்ரிணீ மூல ஸம்ச்ரயம்

விவரணம்

வஞ்சகர்களின் புத்தியை நாசம் செய்பவராய், ஜ்ஞாமில்லாத மூடர்களுக்கு ஜ்ஞானம் பிறப்பிப்பவராய், திருப்புளியின் அடியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீசடகோபமுநிவரை அடிபணிகிறேன்.

நன்றி:ஸ்ரீஅரங்க முத்துசீனிவாசன் ஸ்வாமி மற்றும் மதுரை ஸ்ரீ உ.வே.இரா.அரங்கராஜன் ஸ்வாமி

இவரை போற்றி உ ரைக்கும் பாசுரம்

மாமுனிகள் அருளிய உ பதேசரத்தினமாலை முதல் பாசுரம்

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால்
வந்த உபதேசமார்க்கத்தைச் - சிந்தை செய்து
பின்னவரும் கர்க்க. உபதேசமாய்ப்பேசிகின்றேன்
மன்னிய சீர் வெண்பாவில் வைத்து.

மாமுனிகள் அருளியுள்ள ஆர்த்திப்பரபந்தம் 58ஆம் பாசுரம்

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால்
உன்தனுறவை யுணர்தியபின் - இந்தவுயிர்க்
கெல்லா வுறவும் நீயென்றே யெதிராசா!
நில்லாத துண்டோவென்னெஞ்சு?

வாழித்திருநாமம்

வையகமெண் சடகோபன் மறை வளர்த்தோன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
ஐயன் அருள்மாரி கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
அழகாரும் எதிராசர் அடி பணிவோன் வாழியே
துய்ய உலகாரியன் தன் துணைப் பதத்தோன் வாழியே
தொல் குருகாபுரி அதனைத் துலக்கினான் வாழியே
தெய்வ நகர் குந்தி தன்னில் சிறக்க வந்தோன் வாழியே
திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகள் வாழியே

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: